ISSN - 2235-9796

20 பக்கங்கள் 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 05 | டிசம்பர் - 2015 | இழை - 51

**வாசக நெஞ்சங்களுக்கு...!**


ஜெயவர்த்தன 11

வலையின் இதழ் 51 ஆவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர் களா?

நல்ல நண்பன் தனது நட்பை முதலில் எவ்வித பேரம் பேசலும் இன்றி, முன் நிபந்தனையின்றி விரிந்த மனப்பான்மையுடன் கருமித் தனம் ஏதுமின்றி அள்ளி வழங்கத் தயாராக இருப்பான்.

நல்ல நண்பன் தனது தரத்தினை பெறுமதியாகக் கருதுகிறான்.

தனது சிந்தனை ஆன்மா, பண்பாடு, நடத்தை, ஒழுக்கம் விழுமி யம் என்பனவற்றை வெளிப்படையாகவே வழங்குகின்றான். தனது ஆளுமைப் பண்புகள் இதர மனிதர்களால் மாசுபடுவதை இம்மியளவும் விரும்புவதில்லை.

SOLUTIONS COP21 PARIS 2015 06

எனவே, அவன் தனது நட்பை நாடி வரும் மனிதர்களை நோக்கி முன் நிபந்தனை, உறுதிப்பிரமாணம் என்பனவற்றின் அடிப்படையில் தன்னை நகர்த்துகின்றான்.


டினோஜா 12

ஆகவே உறுதிப் பிரமாணத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப் படும் நட்பே நித்தியமானதும், நிரந்தரமானதுமாகும்.

மனித வாழ்வில் நட்பு என்பது விசித்திரமானது. விந்தையானது. அதனால் ஏற்படும் பாதிப்பு ஆழமானது. பலரது வாழ்வில் பெரும் திருப்பங்களுக்குக் காரணமாகவும் அது அமைகிறது.

பெற்றோர்களது அன்பு உற்றார் உறவினர்களது பாசம், நேசம் சாதிக்க முடியாததை நட்பு சாதித்து விடுகிறது. பெற்றோர் களுக்குப் பிள்ளைகளை சீர்திருத்த முடியாத கையாலாகாத நிலை உருவாகும் பட்சத்தில் அவர்கள், பிள்ளைகளின் நண்பர்களை அணுகி தமது பிள்ளைகளைச் சீர்திருத்த முனைவது அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் நிதர்சன நிகழ்வுகளாகும். எனவே உங்கள் நண்பர்கள் எப்படி?

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...

- 'வலை' வீசல் தொடரும்...


நன்றி.

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

**உள்ளே : நுண்ணறிவு – IQ – வினா–விடை**

## இம்மாத சர்வதேச தினங்கள்...

- டிசம்பர் - 01 - உலக எயிட்ஸ் தினம்
- டிசம்பர் - 02 - உலக வலது குறைந்தோர் தினம்
- டிசம்பர் - 03 - உலக மாற்றுத் திறனாளிகள் தினம்
- டிசம்பர் - 05 - உலக மண்வள தினம்
- டிசம்பர் - 05 - உலக சமூக அபிவிருத்திக்கும், பொருளாதாரத்திற்கு மான சர்வதேச தொண்டர் தினம்
- டிசம்பர் - 05 - நெல்சன் மண்டேலா நினைவு தினம்
- டிசம்பர் - 05 - உலக மண் தினம்
- டிசம்பர் - 07 - உலக விமான போக்குவரத்து தினம்
- டிசம்பர் - 09 - உலக ஊழல் ஒழிப்பு தினம்
- டிசம்பர் - 10 - உலக மனித உரிமைகள் தினம்
- டிசம்பர் - 11 - உலக மலைகள் தினம்
- டிசம்பர் - 13 - உலக சிறுவர் ஒளிபரப்பு தினம்
- டிசம்பர் - 14 - உலக குழந்தைகள் தினம்
- டிசம்பர் - 14 - உலக எரிசக்தி சேமிப்பு தினம்
- டிசம்பர் - 15 - உலக தேயிலை தினம்
- டிசம்பர் - 18 - உலக சிறுபான்மை உரிமைகள் தினம்
- டிசம்பர் - 18 - உலக குடிபெயர்வோர் தினம்
- டிசம்பர் - 23 - உலக உணவு தினம்
- டிசம்பர் - 24 - ஜக்கிய நாடுகள் தினம்
- டிசம்பர் - 26 - தேசிய பாதுகாப்பு தினம்
- உலகம் முழுவதும் கொண்டாடப்படும் இரண்டு பொது நாட்கள் எவை?
  ஜனவரி - 01, மே - 01 (வருடப்பிறப்பு, தொழிலாளர் தினம்)




## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

- இந்திய இராணுவத்தின் தளபதி அண்மையில் கொழும்பு வந்தார். அவர் யார்?
  தல்பிர்சிங்

- கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் 2015 ஆம் ஆண்டு எத்தனையாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது?
  30 ஆண்டுகள்

- சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேரணியின் தொனிப்பொருள் என்ன?
  "ஊழல், இலஞ்சமற்ற இலங்கையைக் கட்டியெழுப்புவோம்"

❒ இலங்கை வங்கி தனது 623 ஆவது புதிய கிளையை அண்மையில் எங்கே திறந்து வைத்தது?
**பள்ளேபெத்தை**

❒ எந்த வகைப்படுத்தலுக்குள் கொழும்பு பங்கு பரிவர்த்தனை இணைந்துள்ளது?
**சர்வதேச தொழிற்துறை வகைப்படுத்தலுக்குள்**

❒ யாழ்.தென்மராட்சிப் பகுதி மற்றும் வலி. கிழக்குப் பகுதி நெல் வயல்களில் என்ன தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது?
**மடிச்சுக்கட்டி**

❒ ரயிலில் பயணச் சீட்டு இன்றிப் பயணிப்போருக்கு எதிர்வரும் 2016 ஜனவரி 1 முதல் எவ்வளவு ரூபா தண்டப் பணமாக அறவிடப்படவுள்ளது?
**5 ஆயிரம் ரூபா**
**முன்னர் 2500/- அறவிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.**

❒ அவன்கார்ட் பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் யார்?
**மேஜர் நிஸ்ஸங்க சேனாதிபதி**

❒ இலங்கையில் எப்பகுதி அண்மையில் அபாய வலயமாக இடர்முகாமைத்துவ அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது?
**பெரகலை வெள்ளவாய பிரதான பாதையின் ரணசிங்ககம என்ற பிரதேச மாகும். அதிக மழை, மண்சரிவே இதற்கு காரணமாகும்.**

❒ 2015 ஆம் ஆண்டு குறித்து காலநிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவல் யாது?
**2015 உஷ்ண ஆண்டு**

❒ திராட்சைப் பழத்தின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடமாகாண விவசாயத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அமிலம் எது?
**ஜிபர்லிக் அமிலம்**

❒ குடாநாட்டு விவசாயிகளின் நன்மை கருதி விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் தருவித்துள்ள மிளகாய் விதையின் பெயர் என்ன?
**எம்.ஐ.கிறீன்**

❒ வடக்கு மாகாண சபையால் இயற்கை பேரிடர் தவிர்ப்பு தினமாக அறிவிக் கப்பட்டுள்ள தினம் எது?
**டிசம்பர் 25**

- ❒ நல்லாட்சி அரசின் முதலாவது பட்ஜெட் -
  ஆதரவு - 160
  எதிர் - 51
  வெளிநடப்பு - 13

- ❒ 2016 ஆம் ஆண்டில் மதுவரியால் அரசுக்கு கிடைக்கப்பெற்ற வருமானம் எவ்வளவு?
  18 ஆயிரம் மில்லியன் ரூபா

- ❒ கொழும்பு மாநகர சபை அண்மையில் தனது எத்தனையாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது?
  150

- ❒ அண்மையில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணயக் குற்றியின் பெறுமதி என்ன?
  500 ரூபா
  கொழும்பு மாநகர சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இது வெளியிடப்பட்டது.

- ❒ கிறிஸ்மஸ் (2015) கொண்டாடுவதற்கு தடை விதித்துள்ள நாடு எது?
  சோமாலியா

- ❒ நத்தார் பண்டிகையை (2015) முன்னிட்டு பொது மன்னிப்பின் பேரில் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளிலிருந்து எத்தனை கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்?
  570

- ❒ வங்கித்துறையில் NDB வங்கி தனது 92 ஆவது கிளையை எங்கே அண்மையில் திறந்து வைத்தது?
  அக்கரைப்பற்றில்

- ❒ அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி யார்? (அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளுக்கான பிரதி உதவிச் செயலாளர்)
  கலாநிதி அமி சீரைட்

- ❒ விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தற்போது பெயர்மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. அது எது?
  நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

# இலங்கையில் இன்று இவர்கள்...

- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தற்போதைய தலைவர் யார்?
  **வஜித குலதிலக்க**

- வடமாகாண மீள்குடியேற்ற துரித நடவடிக்கை குழுவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
  **முத்தலீப் பாபா**

- இலங்கை இந்துப் பேரவையின் புதிய தலைவர் யார்?
  **க.ஞானசேகரம்**

- பாராளுமன்ற விவகார மற்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர் யார்?
  **கருணாரட்ண பரணவிதான**
  இவர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதியமைச்சராகக் கடமையாற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

- இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் யார்?
  **கருணாசேன ஹெட்டியாராச்சி**

- இலங்கைக்கான நெதர்லாந்து நாட்டின் தூதுவர் யார்?
  **ஜோனே தூர்நெவர்ட்**

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இராஜாங்க அமைச்சர் யார்?
  **பிரியங்கர ஜயரத்ன**

- இலங்கை மீள்குடியேற்ற அதிகாரசபையின் பணிப்பாளர் யார்?
  **கலாநிதி வஸீர் ஹீசைன்**

- உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் கல்விப் பிரிவின் தலைவர் யார்?
  **சதீஷ்குமார்**

- இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் யார்?
  **செவி லைட்டிங்**

- இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் யார்?
  **அர்ஜீன மகேந்திரன்**

# உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

◇ உலகில் மிக அண்மையில் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பயங்கர வாதத் தாக்குதல் எந்த நாட்டில் நடைபெற்றது?
**பிரான்ஸின் தலைநகர் பாரிஸில், 129 பேருக்கு மேல் பலியாகினர்.**

◇ பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் நகரில் தீவிரவாதத் தாக்குதல் இடம்பெற்ற இடம் எது?
**பாட்டாகிலான் அரங்கு**

◇ ஒரு நாட்டின் பாராளுமன்றக் குழுவினர் அண்மையில் இலங்கைப் பாராளு மன்றுக்கு விஜயம் செய்தனர். அந்தக் குழுவினர் யார்?
**ராஷ்யா பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் எலியங் உமக்நவ் தலைமையிலான குழுவினர்.**

◇ புளூட்டோவின் குறுங்கோளை நெருங்கி அதன் தெளிவான படங்களை பூமிக்கு அனுப்பி வைத்த விண்கலம் எது?
**ஹொரைஸன்**

◇ கொப்-21 என்பது யாது?
**இது காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உச்சி மாநாடாகும்.**
இந்த மாநாடு 2015 நவம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 11 வரை பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நடைபெற்றது.
150 இற்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்குபற்றினர்.

◇ ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் வழங்கியுள்ள நாடு எது?
**பிரித்தானிய பாராளுமன்றம்**

◇ ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைப்பின் வருடாந்த அமைச்சரவைக் கூட்டம் எங்கு நடைபெற்றது?
**பெல்கிரேட்**

◇ சிறந்த ஆற்றல் மிக்க சந்தைப்படுத்தல் தலைவர்கள் பட்டியலில் இடம்பிடித்த இலங்கை வங்கியின் சந்தைப்படுத்தல் அதிகாரி யார்?
**இந்துநில் லியனகே**

◇ “சென்னை வெள்ளம் உலகுக்கு ஓர் எச்சரிக்கை மணி” எனக்கூறிய பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் யார்? **லோரண்ட் பேபியஸ்**

◇ பிரித்தானியாவை அண்மையில் தாக்கிய புயலின் பெயர் என்ன?
**"டெஸ்மண்ட்"**

◇ வத்திக்கானின் செயின்ட் பீற்றர்ஸ் பசிலிக்காவின் "பரிசுத்த கதவு" எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசுத்த பாப்பரசரினால் திறக்கப்படுகின்றது?
**25 ஆண்டுக்கு ஒரு முறை**
இது கத்தோலிக்க மரபில் பிரமாண்ட வெண்கல பரிசுத்த கதவை திறப்பது, திருச்சபை நம்பிக்கையாளர்கள் கடவுளுடனான தொடர்பை புதுப்பிப்பதாகப் பார்க்கப்படுகின்றது.

◇ சர்வதேச விண்வெளி நிலையத்திற்குத் தேவையான பொருட்கள் ஏற்றப்பட்ட விண்கலம் அண்மையில் அமெரிக்காவினால் ஏவப்பட்டது. அந்த விண்கலத்தின் பெயர் என்ன?
**அட்லஸ் 5 ரொக்கெட் கேப்**

◇ ஐக்கிய அமெரிக்காவின் அரசியல்துறை விவகார உதவிச் செயலாளர் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அண்மையில் இலங்கை வந்தார். அவர் யார்?
**தோமஸ் செனன்**

◇ இலங்கையுடன் மிக நெருக்கமான உறவைப் பேண ஆர்வமாக இருப்பதாக அண்மையில் கூறிய உலகப் பிரபலம் யார்?
**ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின்**

◇ 2015 டிசம்பர் மாத முற்பகுதியில் அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இங்கு எந்த அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்?
**தென்கொரிய நாட்டின் அரசுக்கு எதிராக**

◇ டெங்கு காய்ச்சலுக்கு மெக்சிக்கோ விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மருந்தின் பெயர் என்ன?
"டெங்வக்சியா"

◇ பிலிப்பைன்ஸின் விவசாயத் தீவை அண்மையில் தாக்கிய புயலின் பெயர் என்ன?
மெலர்

◇ தனது படையில் உள்ள சீக்கியருக்கு தலைப்பாகை, தாடி வைக்க அனுமதியளித்துள்ள நாடு எது?
அமெரிக்கா

◈ 2015 ஆம் ஆண்டு கூகுளில் அதிகமாகத் தேடப்பட்ட உலகப் பிரபலம் யார்? **டாக்டர் அப்துல் கலாம்**

◈ அண்மையில் தென்னாபிரிக்காவைத் தாக்கிய வைரஸின் பெயர் என்ன? **'மெர்ஸ்'**

◈ கனடா நாட்டில் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமனம் பெற்ற தமிழ்ப் பெண் யார்?
**வள்ளியம்மை (தமிழ்நாடு)**

◈ அதிகரித்து வரும் காற்று மாசினைக் கட்டுப்படுத்துவதற்காக 17 ஆயிரம் தொழிற்சாலைகளை மூடுமாறு உத்தரவிட்டுள்ள நாடு எது?
**சீனா**
சீனாவில் தற்போது எப்போதும் இல்லாதவாறு காற்று மாசுபாடு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

◈ மனிதனின் சராசரி வேலை நேரம் 8.00 மணியாகும். ஆனால் ஒரு நாட்டில் 6 மணித்தியாலம் என வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த நாடு எது?
**சுவீடன்**

◈ உலகளவில் பத்திரிகையாளருக்கு மிகவும் அச்சுறுத்தலான நாடுகளின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ள நாடு எது?
**சிரியா**
இதேவேளை, பிரான்ஸ் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளது. அத்துடன் ஈராக், பிரேசில், பங்களாதேஷ், தென்சூடான், மற்றும் ஏமன் மூன்றாமிடத்தைப் பிடித்துள்ளன.

◈ சவூதி அரேபியாவின் நகர சபைக்கு முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்ட பெண் யார்?
**சல்மான் பின்ட் ஹிஸாப் அல்ஓதேய்பி**

◈ தாய்லாந்துக்கு அமெரிக்க ஆயுதம் விற்றமைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நாடு எது?
**சீனா**

◈ அமெரிக்க விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்வெளிக்கு அனுப்பிய ஆளில்லா ரொக்கெட் மீண்டும் தரையிறங்கிச் சாதனை படைத்தது. அந்த ரொக்கெட்டின் பெயர் என்ன?
**பல்கானோ-9**

◇ 70 ஆண்டுகளின் பின் விற்பனைக்கு வரும் அடால்ப் ஹிட்லறின் சுயசரிதைப் புத்தகத்தின் பெயர் என்ன?
மெயின் கெம்ப்

◇ ஏபோலா வைரஸிலிருந்து ஒரு நாடு முற்றாக விடுதலை பெற்றுள்ளதாக உலக சுகாதார அமைப்பு அண்மையில் அறிவித்தது. அந்த நாடு எது?
கினியா

◇ எந்தக் காலநிலையால் 2016 இல் பல இலட்சக்கணக்கான மக்கள் பசி மற்றும் நோய் ஆகியவற்றால் பாதிக்கப்படுவதற்கான ஆபத்து அதிகமாகியிருப்பதாக தொண்டு நிறுவனங்கள் அறிவித்துள்ளன. அக் காலநிலை எது?
எல்நினோ

◇ உயிர்வாழ்வதற்குச் சாத்தியமான கோள் ஒன்று அண்மையில் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அக்கோளின் பெயர் என்ன?
வூல்ப் 10614

◇ உலகிலேயே வாழ்வதற்குச் சிறந்த நாடு என ஐ.நா.வால் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ள நாடு எது?
நோர்வே
நாடுகள் வரிசையில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள நாடுகள் எவை?
அவுஸ்ரேலியா, சுவிட்சர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து, ஜேர்மனி, அயர்லாந்து, கனடா, நியூஸிலாந்து, சிங்கப்பூர்
இதேவேளை, உலகில் வாழ்வதற்கு மோசமான நாடுகளாக - நைகர், மத்திய ஆபிரிக்க குடியரவு மற்றும் எரித்தீரியா ஆகயி நாடுகள் ஐ.நா.வினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ புர்கினா பாசோவின் புதிய ஜனாதிபதி யார்?
ரொச்மார்க் கிறிஸ்டியன் கபோரே
இது மேற்கு ஆபிரிக்க நாடாகும். இந்தநாட்டில் பல தடவை இராணுவ சதிப்புரட்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

◎ 300 ஆண்டுகளுக்கு (1708) முன்னர் கடலில் மூழ்கிப்போன கப்பல் ஒன்றினை கொலம்பியா கண்டு பிடித்தது. அந்தக் கப்பலின் பெயர் என்ன?
சென் ஜோஸ் கலியோன்

◎ கொலம்பிய ஜனாதிபதியின் பெயர் என்ன? ஜுவான் மானுவர் சான்டோஸ்

◎ நாஸாவின் விஞ்ஞானப் பிரிவின் இயக்குநர் யார்?
**ஜோன் கிரூன்ஸ்ப்பிரியு**

◎ செயற்கை கருத்தரிப்பு முறையில் முதல் முறையாக நாய்க்குட்டிகள் எந்த நாட்டு விஞ்ஞானிகளால் பிறப்பிக்கப்பட்டது?
**அமெரிக்க விஞ்ஞானிகள்**

◎ ஜெமன் நாட்டின் ஜனாதிபதி யார்?
**அப்தரப்பு மன்சூர்ஹதி**

◎ காலநிலைத் திட்டத்தின் உலக இயக்குநர் யார்?
**ஜெனிபர் மோர்கன்**

◎ தென் மைஜீரியாவின் புதிய மன்னர் யார்?
**அடியியி - இனிடன் ஒகுன்வசி**

◎ இத்தாலி நாட்டின் இலங்கைத் தூதுவர் யார்?
தயா பெல் பொல

## அயல் நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

※ இந்தியாவில் 137 ஆண்டுகள் தொடர்ச்சியாக எதுவித தடங்கலுமின்றி வெளி வந்த பிரபலமான பத்திரிகை ஒன்று அண்மையில் பெய்த கடும் மழையினால் வெளிவரத் தடைப்பட்டது. அப் பத்திரிகை எது?
**இந்து பத்திரிகை**

※ அண்மையில் காலமாகிய பிரபல சிங்கள நடிகர் யார்?
**சுனில் ஹெட்டியாராச்சி (வயது-78)**

※ இந்தியாவின் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் வெளியிட்ட அறிக்கையில் சென்னை வெள்ளம் குறித்து குறிப்பிட்ட விடயம் என்ன?
**சென்னையில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்துக்கு திட்டமிடப்படாத வகையில் நடந்துள்ள நகரமயமாக்கலே காரணம் எனக் கூறியுள்ளது.**

※ ஆளில்லாது தரைக் கட்டுப்பாட்டு இயக்கத்தில் செயற்படும் ட்ரோன் ரக 100 விமானங்களை இந்தியா எந்த நாட்டிடமிருந்து வாங்கவுள்ளது?
**அமெரிக்கா**

※ அண்மையில் ரஷ்யா சென்ற மோடி அவர்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி வழங்கிய பரிசு எது?
**காந்தியின் கையால் எழுதப்பட்ட குறிப்பு, வங்கத்து வாள்**

※ ஐ.நா. விரும்பினால் ஐ.எஸ்.க்கு எதிரான போரில் இந்தியா பங்கேற்கும் என அண்மையில் கூறிய இந்தியாவின் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் யார்?
**மனோகர் பாரிக்கார்**

※ அண்மையில் தமிழ்நாட்டில் காலமாகிய மூத்த எழுத்தாளர் யார்?
**பத்மஹ சார்வாகன்**

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ அண்மையில் ஊக்கமருந்து பரிசோதனையில் சிக்கிய இலங்கை கிரிக்கெட் வீரர் யார்?
**குசல் ஜனித் பெரேரா**

⊙ அயர்லாந்து கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். அவர் யார்?
**ஜோன் முனி**

⊙ இங்கிலாந்தின் முக்கிய கிரிக்கெட் கழகங்களில் ஒன்றான மேரிலெபோன் கிரிக்கட் கழகம் இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ஒருவருக்கு வாழ்நாள் உறுப்பினர் பதவி கொடுத்து கௌரவித்துள்ளது. அந்த வீரர் யார்?
**ஜயவர்த்தன**
மேற்படி கழகத்தில் உறுப்பினராகும் 14 ஆவது இலங்கை வீரர் இவராவார்.

⊙ டெஸ்ட் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்திய வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ள இலங்கை வீரர் யார்?
**முத்தையா முரளிதரன்**

⊙ இலங்கை தனது விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாக உதவி வழங்கவுள்ள நாடு எது?
**பிரான்ஸ்**

⊙ இந்தியாவில் அடுத்த வருடம் (2016) நடைபெறவுள்ள ரியோ 2016 ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சர்வதேச ஈட்டி எறிதலில் தகுதியைப் பெற்ற வீரர் யார்?
**சுமேத ரணசிங்க**

⊙ அமெரிக்காவில் நடைபெற்ற குளிர்கால தேசிய நீச்சல் சம்பியன் ஷிப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்த வீரர் யார்?
**மைக்கல் பெல்ப்ஸ்**

⊙ அண்மையில் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட ஹோண்டுராஸ் நாட்டின் சர்வதேச கால்பந்து வீரர் யார்?
**அர்னால்ட் பெரால்டா (வயது-26)**

⊙ ஊக்கமருந்து பாவித்த சர்ச்சையில் சிக்கியுள்ள இலங்கை கிரிக்கெட் அணி வீரர் யார்?
**குசல் ஜெனித் பெரேரா**

⊙ தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-0 என்று வென்ற இந்திய அணி, தனது வெற்றியை யாருக்குச் சமர்ப்பித்தது?
**சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு**

⊙ சர்வதேச பூப்பந்தாட்ட சம்மேளனம் இவ்வாண்டுக்கான (2015) சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
**கரோலின் மரின் (ஸ்பெயின்)**

⊙ ஊக்கமருந்து பாவனையின் எதிரொலி காரணமாக எந்த நாட்டு தடகள அதிகாரிகள் நீக்கப்பட்டுள்ளனர்?
**கென்யா**

⊙ வடமாகாணத்தின் சிறந்த விளையாட்டு நட்சத்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட வீராங்கனை யார்?
**ஜே.ஜே.டினேஜா**
மேற்படி இவர் பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பழுதூக்கல் தொடரில் வெண்கலப் பதக்கத்தையும், பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் தொடரில் தங்கப்பதக்கத்தையும் வென்றெடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

⊙ 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு நட்சத்திரத்துக்கான விருதினை வென்ற டென்னிஸ் வீராங்கனை யார்?
**செரீனா வில்லியம்ஸ் (வயது-34) (அமெரிக்கா)**
32 ஆண்டுகளுக்குப் பின்னர் வீராங்கனை ஒருவர் சிறந்த நட்சத்திரத்துக்கான விருதினைப் பெறுவது இதுவே முதன் முறையாகும்.
1983 ஆம் ஆண்டு மேரி டெக்கர் இந்த விருதினைப் பெற்றிருந்தமை குறிப் பிடத்தக்கது.

⊙ 2015 இல் அதிக டெஸ்ட்களில் தோற்ற அணியாகப் பதிவு செய்யப்பட்ட அணி எது?
**இலங்கை**

◈ கொங்கொங்கில் நடைபெற்ற 9 ஆவது ஆசிய கனிஷ்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் சம்பியனான அணி எது?
**இலங்கை அணி**

◈ தற்போது இருபதுக்கு 20 போட்டிகளில் 600 ஆவது சிக்ஸர்களை அடித்துச் சாதனை படைத்திருக்கும் வீரர் யார்?
**கிறிஸ் கெய்ஸ் (மேற்கிந்தியத் தீவு)**

◈ கழக அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண கால்பந்துப் போட்டியில் சம்பியனாகிய அணி எது?
**பார்சிலோனா அணி**

◈ சர்வதேச ரென்னிஸ் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்ட வீர, வீராங்கனைகள் யார்?
1. **நோவக் ஜொகோவிச் (சேர்பியா)**
2. **செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா)**
3. **சானியா மிர்ஷா (இந்தியா)**
4. **மார்ட்டினா ஹிங்கிஸ் (இங்கிலாந்து)**

**இதேவேளை, டல்மா ஹவ்பி (ஹங்கேரி) டெயிலர் பிரிட்ஸ் (ஹங்கேரி) இளையோருக்கான சம்பியன்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.**

◈ 2015 ஐ.சி.சி.யின் சிறந்த வீர வீராங்கனைகளாக அறிவிக்கப்பட்டுள்ளவர்கள் யார்?
1.**ஸ்டீவ் ஸ்மித் (அவுஸ்ரேலியா)**
2. **மெக்லனிங் (அவுஸ்ரேலியா)**

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ உலக சுகாதார ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட புகைத்தல் நிவாரணம் தொடர்பான 2015 ஆம் ஆண்டுக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட சுகாதார, போஷாக்கு மற்றும் தேசிய மருத்துவ அமைச்சர் யார்? (இது டிசம்பர் 7 இல் வழங்கப்பட்டது)
**டாக்டர் ராஜித சேனாரத்ன**

❖ வங்கித்துறையில் ஒஸ்கார் விருதாகக் கருதப்படும் த பேங்கர் விருது நான்காவது முறையாகவும் கிடைக்கப் பெற்ற வங்கி எது? **சம்பத் வங்கி**

- 2015 ஆம் ஆண்டின் சிறந்த கூட்டாண்மைப் பிரஜைக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட வங்கி எது? **சம்பத் வங்கி**
  சுற்றுச்சூழல் சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் நீடித்து நிலைத்து நிற்கும் தன்மை போன்ற காரணிகளை மதிப்பீடு செய்து இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் மேற்படி விருது வழங்கப்பட்டது.

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

- CSE - விரிவாக்கம்?
  **Colombo Stock Exchange**

- வனவிலங்கு தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
  கி.பி. 1890

- உலகில் மிகக்கொடூரமான நில நடுக்கம் 1557 இல் சீனாவில் நடைபெற்றது. இதில் எத்தனை இலட்சம் மக்கள் சாவடைந்தனர்?
  **8 இலட்சம் பேர்**

- முதன் முதலில் தொழிற்புரட்சி நடைபெற்ற நாடு எது?
  **இங்கிலாந்து**

- ஆசியாவில் முதன் முதலாக தொழில் மயமான நாடு எது?
  **ஜப்பான்**

- அமெரிக்காவின் 20 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்ட மாநிலம் எது?
  **மிஸிசிப்பி**

- ஆண்டுக்கு 20 சூறாவளிகளாவது தாக்கும் நாடு எது?
  **பிலிப்பைன்ஸ்**

- சுத்தமான காற்றினை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் நாடு எது?
  **சீனா**

- இலங்கையின் முதல் பெண் சரித்திர நாவலாசிரியர் யார்?
  **சிவயோகமலர் ஜெயக்குமார் (வடமராட்சி - திக்கம்)**

- அன்னை திரேசா எத்தனையாம் ஆண்டு உயிரிழந்தார்,
  1997 இல் 87 வயதில் உயிரிழந்தார்.
  அன்னைக்கு 2016 ஆண்டு பரிசுத்த பாப்பரசரினால் புனிதர் பட்டம் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

⌗ நாலடியார் யாரால் எழுதப்பட்டது? அது எதனைக் குறித்த நூல்?
**நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல் ஆகும். இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்க ளால் ஆனது.**
இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகின்றது. இதனன நாலடி நானூறு எனவும் பெயர் பெற்றது. "வேளாண்வேதம்" என்ற பெயரும் இதற்கு உண்டு.
பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இந்நூல் முத்தரையர் என்னும் பிரிவினரைப் பற்றிக் கூறும் நூல் ஆகும்.

---

# நுண்ணறிவு – IQ

01. இரண்டு புகைவண்டிகள் ஒரேநேரத்தில் வெவ்வேறு தரிப்பிடங்களிலிருந்து எதிர்எதிர் திசைகளில் புறப்படுகின்றது. ஒரு தரிப்பிடத்தில் இருந்து 110 கிலோமீற்றரில் அவை இரண்டும் ஒன்றையொன்று கடக்கின்றன எனில், இரண்டு புகையிரதத்தினதும் வேகங்களுக்கு இடையிலான விகிதம் யாது?

1) 11:9 2) 11:20 3) 9:20 4) 11:8

02. இரண்டு புகைவண்டிகள் ஒரேநேரத்தில் வெவ்வேறு தரிப்பிடங்களிலிருந்து ஒன்றையொன்று நோக்கிப் புறப்படுகின்றது. இரண்டு புகைவண்டிகளினதும் வேகங்கள் முறையே 50km/h, 40km/h ஆகும். அவை ஒன்றையொன்று சந்திக்கும் நேரத்தில் முதலாவது புகைவண்டி மற்றையதைவிட 100 கிலோமீற்றர் அதிகமாக பயணித்திருந்தால் இரண்டு புகையிரத நிலையங்களுக்கும் இடையிலான தூரம் யாது?

1) 500 2) 1100 3) 900 4) 700

பின்வரும் தகவல்களைக்கொண்டு கீழ்வரும் (03 - 05) வினாக்களுக்கு விடைதருக?

கந்தசாமியின் தோப்பில் கடந்த மாதம் பெய்த அடைமழையினால் 80 வாழைமரங்களும் நாசமாகின. நாசமான வாழைமரங்களின் எண்ணிக்கையில் 25% மான பப்பாசி மரங்களும், நாசமான பப்பாசி மரங்களில் 1/4 பங்கு மாமரங்களும் அடியோடு பாறியிருந்தன.

03. நாசமாகிய மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?


//////////////////////////////////////////////////////////////////

04. தோப்பிலிருந்த இம் மூன்று வகை மரங்களினதும் மொத்த எண்ணிக்கை 420 எனில், நாசமான மரங்கள் மொத்த மரங்களின் எத்தனை சதவிகிதம்?

05. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நட்டத்திற்கு அரசாங்கம் நட்ட ஈடாக 40% ஐ வழங்குகிறது எனில், கந்தசாமிக்கு 80,000 ரூபா நட்டஈடாகக் கிடைத்தது எனில், அவருக்கு ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி யாது?


தரப்பட்ட உருக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க?

06.




1 2 3 4 5

07.




1 2 3 4 5

08.




1 2 3 4 5

09.



1 2 3 4 5

10.



1 2 3 4 5

11. 22 m நீளமும் 17 m அகலமும் கொண்ட பூங்கா ஒன்றின் வெளிச் சுற்றுப் பகுதிக்கு 2 m அகலத்திற்கு புல் நாட்டப்பட்டுள்ளது. புல் பதிக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?

12. 7 மணி 25 நிமிடம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரிந்தால் உண்மையான நேரம் யாது?

13. கனவுரு ஒன்றின் ஓரங்களின் நீளங்களின் கூட்டுத்தொகை 72 மீற்றர் எனில் அக்கனவுருவின் கொள்ளளவு யாது?

14. 3 6 9 12 27 24 ......... .........

15. 2 4 16 256 ...........

16. 12000 1200 150 25 .........


17. 2 3 13 5 7 74 ...... ....... .......

18. 5 10 30 120 ........

19. 1 4 10 19 .......

20. 3 5 9 17 33 .........

21.




22.

| | | |
|---|---|---|
| 4 | 12 | 16 |
| 5 | 20 | 25 |
| 6 | 30 | 36 |
| 7 | ..... | 49 |

23.

| | | |
|---|---|---|
| 23 | 50 | 27 |
| 25 | 46 | 21 |
| 27 | 47 | 20 |
| 22 | ...... | 23 |

24.


| | | |
|---|---|---|
| 24 | 6 | 6 |
| 30 | 12 | 42 |
| 36 | 18 | 48 |
| 42 | ...... | 54 |

25. சுரேஷின் மாதச் சம்பளம் 5000 ரூபா எனின், டிசெம்பர் மாதம் ஊக்குவிப்பு கொடுப்பனவுடன் சேர்த்து 11, 000 வழங்கப்பட்டது. ஊக்குவிப்பு கொடுப்ப னவாக வழங்கப்பட்ட மேலதிக பணம் சுரேஷின் ஆண்டு சம்பளத்தின் எத்தனை சதவீதம்?

26. ஐந்து எண்களின் சராசரி 27 ஆகும். இந்த ஐந்து எண்களில் ஒன்றை நீக்கும்போது சராசரி 25 ஆகிறது. நீக்கப்பட்ட எண் யாது?

27. மூன்று வருடங்களின் முன்னர் ராமினதும், ரவியினதும் வயதுகளின் சராசரி 18 வருடங்கள். இவர்களுடன் மாலா இணையும் போது அவர்களின் வயதுகளின் சராசரி 22 வருடங்கள். மாலாவின் தற்போதைய வயது யாது?

தோட்டம் ஒன்றில் பயிர்கள் பயிரிடப்பட்ட பகுதிகளின் வீதமும், பயிரிடப்பட்ட பயிர்களின் வகையும் கீழுள்ள வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.




28. தோட்டத்தில் உள்ள மொத்த பயிர்களின் பரப்பு 90 $m^2$ எனின் தோட்டத்தில் தக்காளி பயிரிடப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?

29. கத்தரி பயிரிடப்பட்ட பிரதேசத்தை காட்டும் பகுதி எத்தனை பாகை கோணத்தினால் காட்டப்பட்டுள்ளது?

30. தோட்டத்திலுள்ள பயிர்களான வெங்காயம், கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றிற்கு முறையே 3 : 2 : 2 : 1 என்ற விகிதத்தில் கிருமிநாசினி விசிறப்பட்டது. இதன்போது 24 லீற்றர் கிருமிநாசினி தேவைப்பட்டது. ஒவ்வொரு பயிர்களுக்கும் எவ்வளவு கிருமிநாசினி பாவிக்கப்பட்டது என்பதைத் தனித்தனியே காண்க?



Valai வலை சமகால பொது அறிவுத் தொகுப்பு யின் 2014 இதழ்களின் தொகுப்பு

உங்களது பொதுஅறிவு வினாத்தாளை துணிவுடன் எதிர்கொள்வதற்கு காலம் பிந்திய தகவல்கள் நீக்கப்பட்டு திருத்திய பதிப்பாக வலை இதழ்களின் 2014 இன் தொகுப்பும் வெளிவந்து விற்பனையாகின்றது..... விற்பனையாளரிடம் கேட்டு வாங்கிப் பயன்பெறுங்கள். நன்றி.

விலை 280/-

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | 11:9 | 11. | 140 $m^2$ | 21. | 10 |
| 02. | 900 | 12. | 5 மணி 25 நிமிடங்கள் | 22. | 42 |
| 03. | 105 | 13. | 216 $m^3$ | 23. | 45 |
| 04. | 25% (105 : 420) | 14. | 81, 48 | 24. | 24 |
| 05. | 2 இலட்சம் | 15. | 65536 | 25. | 10% |
| 06. | (4) | 16. | 6.25 | 26. | 35 |
| 07. | (2) | 17. | 9 - 11 - 202 | 27. | 11 |
| 08. | (4) | 18. | 460 | 28. | 13.5$m^2$ |
| 09. | (1) | 19. | 31 | 29. | 126 பாகை |
| 10. | (4) | 20. | 65 | 30. | 91:61:61:31 |

## ❒ விடுலமு திட்டம் – Vidulamu Lanka Project

புதிதாக மின்னிணைப்பை பெற்றுக்கொள்ளும் முகமாக வசதியற்றவர்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவும் நோக்குடன் இலங்கை மின்சக்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட திட்டமே இதுவாகும்.

"விடுலமு" இருளகன்று முழுநாடும் ஒளிமயம், மின் செற்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடனடிப்படையில் வீட்டு உள்ளக மின் இணைப்பு வேலைகளைச் செய்து கொடுத்து மின்சாரம் வழங்குவதற்கு மின்சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தில் கீழ் வழங்கப்படும் அதிகூடிய கடன் தொகையாக வீட்டு உள்ளக மின் இணைப்புக்கு (வயரிங்) 17 ஆயிரத்து 500 ரூபாவும், இலங்கை மின்சார சபை மின் வழங்குவதற்கான செலவுத் தொகையாக 22 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படும்.

இந்தக் கடன் தொகை 72 மாதங்களில் 7 வீத வட்டியுடன் மின் பட்டிய லுடன் சேர்த்து அறவிடப்படும்.

மேற்படி விண்ணப்பிப்பதற்கான படிவங்களை பிரதேச செயலகத்தில் கிராம அலுவலர் ஊடாக பயணிகளுக்கு வழங்கப்படும். பின்னர் 5 நாட் களுக்குள் தத்தமது மின் பாவனையாளர் சேவை நிலையத்தில் ஒப்ப டைத்தல் வேண்டும்.

## ❒ உலகில் கருணைக் கொலை (Euthanasia)




வதையா இறப்பு அல்லது கருணைக் கொலை என்பது உடல் வதையில் இருந்து மீள்வதற்காக ஒருவரின் உயிரை திட்டமிட்டு முடிவடையச் செய்தலாகும்.

வதையா இறப்புத் தொடர்பான வரையறைகளும், சட்டங்களும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. எனினும், பெரும்பாலான (பெரும்பான்மை) நாடுகளில் இதற்கு சட்ட ஏற்பு இல்லை.

வதையா இறப்பு சமூக, சமய, அரசியல், சட்ட, அறிவியல் நோக்கில் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாகவே இருந்து வருகிறது.

தன் விரும்பா கருணைக் கொலை நோயரின் விருப்பத்தின் பேரில் செய்யப்படுவதாகும். மருத்துவரின் உதவியுடன் நோயரே தன் வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருவதால் இதற்கு உதவி செய்யப்பட்ட தற்கொலை என்ற பெயருமுண்டு.

விருப்பம் பெறவியலா வகை ஒன்றும் உண்டு. அது நோயரின் விருப்பத் தைப் பெற இயலா நேரத்தில் செய்யப்படுகிறது. உதாரணத்துக்கு உயிரைப் பாதிக்கும் நோயுடன் பிறந்து குழந்தை, ஆண்டுக் கணக்கில் ஆழ்மயக்கத்தில் இருக்கும் நபர். இதனைக் கருணைக் கொலை என்றும் கூறுவர்.

நச்சுப் பொருட்களைப் பயன்படுத்தி உயிரை முடிவுக்குக் கொண்டு வருவது முனைப்பு வகை ஆகும். நோயரே கருணைக் கொலை கருவியைப் பயன் படுத்தி தன் உயிரை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளில் வதையா இறப்புக்கு சட்ட அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆனால் வதையா இறப்புச் செய்பவரும், செய்ய உதவுபவர்களும் கடுமையான சட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

---

## ❒ INWEPF – மாநாடு (Sri Lanka commitee of the International Network for Water and Ecosystems in Paddy Fields)

INWEPF

திறந்த மேடையை வழங்கும் ஒரு சர்வதேச மன்றமாகும்.

1. உரையாடல்களை ஊக்குவித்தல்
2. அனுபவங்களையும், தகவல்களையும் பரிமாறல்
3. ஏற்கனவேயுள்ள மன்றங்களுக்கு இடையிலான கூட்டுறவினை அதிகரித்தல்
4. நெற்பயிர்களுக்கான நீர்ப்பாசனம், சூழலைப் பாதுகாத்தல் மற்றும் நல்லாட்சி என்பவற்றை நோக்கிய புத்தாக்கக் கொள்கை வகுப்புக்க ளுக்கான கருத்தாக்கங்களை உருவாக்குதல்



தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com